ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

तादृक्षस्य त्रिभुवनगुरोस्तेऽवतारस्य कार्यं
यत्कुर्यान्न यदि स भवान् पालनं मादृशानाम् ।
वेदैः पूतैरकृतकवचोभिश्च संमृग्यमाणं
द्रष्टुं शक्ताः कथमिव जनाः त्वत्प्रसादः कथं स्यात् ॥

𑌤𑌾𑌦𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌗𑌰𑍋𑌸𑍍𑌤𑍇𑌽𑌵𑌤𑌾𑌰𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂
𑌯𑌤𑍍𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌯𑌦𑌿 𑌸𑌭𑌵𑌾𑌨𑍍 𑌪𑌾𑌲𑌨𑌂 𑌮𑌾𑌦𑍃𑌶𑌾𑌨𑌾𑌂 ।
𑌵𑍇𑌦𑍈𑌃 𑌪𑍂𑌤𑍈𑌰𑌕𑍃𑌤𑌕𑌵𑌚𑍋𑌭𑌿𑌶𑍍𑌚𑌸𑌂𑌮𑍃𑌗𑍍𑌯𑌮𑌾𑌣𑌂
𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌶𑌕𑍍𑌤𑌾𑌃 𑌕𑌥𑌮𑌿𑌵 𑌜𑌨𑌾𑌃 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌃 𑌕𑌥𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥

பிர்மா முதலான விண்ணவர்களால் போற்றக்கூடிய மகிமை பெற்றவரும் மூவுலகங்களுக்கும் தந்தையாயும் விளங்கும் ஹே பரமேச்வர! எம்போன்ற வேறு வழியில்லாமல் ஸம்ஸாரஸமுத்திரத்தில் விழுந்து கஷ்டப்படும் ஜனங்களைப் பரிபாலிக்கவேண்டி சிறந்த பல திருநாமங்களுடன் அநேக புண்யக்ஷேத்திரங்களில் யாதொரு உம்முடைய அவதாரமானது எற்பட்டிருக்கின்றதோ அதற்கு அவசியம் செய்யவேண்டியதான அநாதரக்ஷணம் என்கிற காரியத்தை நீர் செய்யாமலிருந்தீரேயானால் ஸத்யவாக்காயும் மிகவும் பரிசுத்தங்களாயுமுள்ள வேதங்களாலும் சிரமப்பட்டுத் தேடப்பட்டவரான உம்மை ஸாமான்யமான அறிவில்லாத ஜனங்கள் தரிசிப்பதற்கு எப்படி சக்தி பொருந்தியவர்களாவார்கள்? சக்தியற்ற அவர்களுக்கு உம்முடைய அனுக்கிரகம் வேறுவிதம் எப்படி அடையமுடியும்?

ஹே சங்கர உலகில் பலவிதமான நாமரூபங்களுடன் நீர் தோன்றியிருப்பதற்குப் பிரயோஜனம் தீரான ஸாதுக்களைக் காப்பாற்றவேண்டியே. அவ்விதக் கார்யத்தை நீர் செய்து எம்போன்ற கதியற்ற ஜனங்களை ரக்ஷித்து உமது அவதாரத்திற்குறிய முக்கியமான பயனைப் பெறவேண்டுமென்றும் அவ்விதம் நீர் கருணை செயயாவிட்டால் எங்களால் உமது அனுக்கிரகத்தைப் பெறமுடியாதென்றும் ஒரு பக்தர் பகவானிடம் பிரார்த்திக்கிறார். சுபம்.

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

பிரபவஸ்ரீ பங்குனிமீ ௧௰௨


## சென்னையில் நடந்த வர்ணாச்ரம தர்ம மஹாநாட்டில் கொண்டுவந்த விஷயங்களில் எட்டு வயதிற்குமேல செய்யும் கன்னிகாதானம் சாஸ்திரீயமா என்பதும் ஒன்று.

(106-வது பக்கத்தொடர்ச்சி)

ஸ்திரீகளுக்கு விவாஹத்தையே உபநயநமாகக் கூறியிருக்கிறபடியால் உபநயநத்திற்கு ஏற்பட்ட முக்யகாலமான எட்டாவது வயதே கன்னியாதானத்திற்கும் முக்யகாலமாகும். இக்கருத்தைக்கொண்டுதான்ஸம்வர்த்தமகரிஷி ஸ்திரீகளுக்கு எட்டாவது வயதில் செய்யப்படும் விவாஹம்தான் प्रशस्यते மிகவும் சிறந்ததாகும். அதாவது சாஸ்திரீயமான முக்யகாலத்தில் செய்ததாகும் என்று ஸ்பஷ்டமாகத் தெரிவித்திருக்கின்றார். ஆகையால் எட்டுவயதிற்குமேல் ஸ்திரீகளுக்குச் செய்யப்படும் கன்னிகாதானமானது சாஸ்திரீயமான முக்யகாலத்தில் செய்ததாகாது. முக்யகாலமாக ஆகாவிட்டாலும் அதுவும் சாஸ்திரீயம்தான். பின்னே கௌணகாலமாகும், எட்டுவயதிற்குமேல் செய்யப்படும் கன்னிகாதானம் சாஸ்திரீயமா என்ற கேள்விக்கு சாஸ்திரீயம்தான் ஆனால் முக்யகாலமாகாதென்று இதுவரையில் நிரூபித்தோம். எட்டுவயதிற்குமேல் செய்யப்படும் கன்னியாதானமும் சாஸ்திரீயம்தான் ஆனால் அது கௌணகாலமாகும் அந்த விவாஹத்தை சாஸ்திரீயமாக அங்கீகரிக்கலாமாவென்றால் அவசியம் சாஸ்திரீயமாக அங்கீகரிக்கலாம், அதெங்ஙனமெனில் அடியில் வரும் பிரமாணவசனங்களால் காண்க.

अष्टवर्षा भवेद्गौरी नववर्षा च रोहिणी ।
दशवर्षा भवेत्कन्या अत ऊर्ध्वं रजस्वला ॥ संवर्तः ।

அஷ்டவர்ஷா பவேத்கௌரீ நவவர்ஷா ச ரோஹிணீ ।
தசவர்ஷா பவேத்கந்யா அத ஊர்த்வம் ரஜஸ்வலா ।

## எட்டுவயதிற்குமேல் செய்யும்கன்னிகாதானம்சாஸ்திரீயமாகாது

எட்டுவயதுள்ள ஸ்திரீக்கு கௌரீ என்று பெயர். 9-வயது கொண்டவளுக்கு ரோஹிணி என்று பெயர். 10-வயது கொண்டவளுக்குக் கன்யா என்று பெயர். அதற்குமேலுள்ள வயதிலிருப்பவர்களுக்கு ரஜஸ்வலை என்று பெயர் என்று 8, 9, 10 என்கிற இந்த வயதிலிருக்கும் ஸ்திரீகளுக்கு கௌரீ ரோஹிணி கன்யா என்று பெயர் என்று ஸம்வர்த்தர்கூறுகிறார். இவ்விதமே பாராசர ஸ்மிருதியிலும் பெயரிடப் பட்டிருக்கின்றது இப்பெயர் எதற்காக வென்றால் இப்பெயர்வாய்ந்த கன்னிகைகளை தானம் செய்தால் அதினால் ஏற்படும் பிரயோஜனத்தை யறிவிக்கவேண்டி, யாது பயன் என்றால்

गौरीं ददन्नाकपृष्ठं वैकुंठं रोहिणीं ददत् ।
कन्यां ददद्ब्रह्मलोकं रौरवं तु रजस्वलाम् ॥ मरीचिः ।
𑌗𑍌𑌰𑍀𑌂 𑌦𑌦𑌨𑍍𑌨𑌾𑌕𑌪𑍃𑌷𑍍𑌠𑌂 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌂 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌂 𑌦𑌦𑌤𑍍 ।
𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑌦𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌂 𑌰𑍌𑌰𑌵𑌂 𑌤𑍁 𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾𑌮𑍍 ॥

கௌரீயான கன்னிகையை தானம்செய்துகொடுத்தவன் ஸ்வர்க்க லோகத்தையடைகிறான். ரோஹிணியை தானம் செய்தால் வைகுண்டத்தையடைகிறான் கன்னிகையை தானம் செய்தால் பிர்மலோகத்தையடைகிறான், ரஜஸ்வலையை விவாஹம் செய்து கொடுப்பவன் ரௌரவம் என்கிற கொடிய நரகத்தையடைகிறான் என்று மரீசி சொல்லியிருக்கிறார்.

ருதுவாகாமல் இருக்கும்வரையில் ஸ்திரீகளுக்குச் செய்யப்படும் விவாஹம் சாஸ்திரீயமான கன்னியாதானமேயாகும்.

இக்கருத்தைக் கொண்டுதான் மரீசிவசனம் ஏற்பட்டிருக்கிறது. மேலும்,

तस्मात् विवाहयेत्कन्यां यावन्नर्तुमती भवेत् ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌵𑌿𑌵𑌾𑌹𑌯𑍇𑌤𑍍𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌰𑍍𑌤𑍁𑌮𑌤𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

ஆகையால் எவ்வளவுக்குள் ருதுவாகவில்லையோ அதற்குள் கன்னியாப் பருவத்திலேயே ஸ்திரீக்கு விவாஹம் செய்துவிடவேண்டும் என்று ஸம்வர்த்தரும்

अतोऽप्रवृत्ते रजसि कन्यां दद्यात् पिता सकृत् । निर्णयसिन्धौ ।
𑌅𑌤𑍋𑌽𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇 𑌰𑌜𑌸𑌿 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌦𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑌿𑌤𑌾 𑌸𑌕𑍃𑌤𑍍 ॥

ஆகையால் ருதுவாகிறதற்கு முன்பிதா தன் கன்னிகையை விவாஹம் செய்துகொடுக்கவேணுமென்று நிர்ணய ஸிந்துவிலும் प्रदानं प्रागृतोः ருதுவிற்கு முந்தி கன்னிகையைக்கொடுக்கவேண்டு மென்று கௌதமரும் மற்றும் பல மஹரிஷிகளும் ருதுவாகிற தற்குமுன் விவாஹம் செய்யவேண்டுமென்றும் அவ்விதம் செய் யப்படும் விவாஹத்தால் எற்படும் பலன்களையும் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருப்பதால் ஸ்திரீகளுக்கு எட்டாவது வயதிற்குமேல் ருதுவாவதற்குமுன் செய்யப்படும் விவாஹமும் சாஸ்திரீயம்தான் அசாஸ்திரீயமென்று கூறமுடியாது. ருதுவானபிறகு செய்யப் படும் விவாஹமானது அசாஸ்திரீயமென்றும் தோஷமுள்ளதென் றும் அந்த தம்பதிகள் வைதிக கர்மாவிற்கு அருகர்களல்லவென் றும் பலவாறாக சாஸ்திரங்களில் நிந்திக்கப்பட்டிருப்பதால் சிஷ்டர் களால் அங்கீகரிக்கத்தக்கதல்ல. இதைப்பற்றி எம்மால் எழுதப் பட்டவயோநிர்ணயபாவப்பிரகாசிகை என்கிற கிரந்தத்தில் விஸ்தா ரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. இதவிஷயம் அதிகம் அரிய விரும்புவோர் அதைப்பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். பிரு கிருதத்தில் அதை விரித்தெழுதவேண்டிய அவசியமில்லாத படியால் விடுத்தனம். சுபம்.

உபபத்திராதிபர்

## ஸ்திரீகள் மகாநாடு.

(112-வது பக்கத்தொடர்ச்சி)

மற்றும் இம்மகாநாட்டில் பால்ய விவாஹத்தால் பெண்மணி கள் கல்வித் துறையில் அபிவிருத்தி செய்துகொள்ள முடியாமற் போகிறதென்றும் பிஞ்சில் பழுப்பதுபோல் வாலப்பருவத்திலே யே யுவயுவதிகள் பெற்றோர்களாகி விடுவதால் அவர்களுக்கும் அவர்கள் ஸந்ததிகளுக்கும் கெடுதல் விளைகிறதென்றும் சில சம ஸ்தானங்கள் அனுஷ்டித்திருக்கும் வழியைப் பின்பற்றி விவாக வயதை உயர்த்தவேண்டுமென்றும் பேசிவிட்டார்களென்று பத் திராதிபர் கலம் அகமகிழ்ந்து வரைகிறது.

இது விஷயத்தைப் பற்றி நானும் இப்பத்திரிகையில் பல ஆஸ்திகர்களும் விரிவாய் எழுதி விட்டதால் மீண்டும் மீண்டும் விரிக்கிற்பயன் யாதுமில்லையென சுருங்கச்சொல்வதென்றால் இவர்

கள் கூறும் யோசனை கூடிய சீக்கிரம் நம் உலகை அழித்துவிடவும் மதத்தைப் பெயர்கூட இல்லாமல் நாசப்படுத்தவும் தான் கூடுமானதால் இந்தியாவின் பாதிவ்ரத்யச் செல்வமழிந்து

कुलक्षये प्रणश्यन्ति कुलधर्मास्सनातनाः ।

குலக்ஷயே ப்ரணஶ்யந்தி குலதர்மாஸ்ஸநாதநா: ॥

என்று விஷாதாத்தியாயத்தில் அர்ஜுனன் கூறியவாறுதான் நடக்குமென்பதை ஆஸ்திகர்யாவரும் உணரவேண்டும். உண்மையான இதையும் கவனிக்கவேண்டும் இக்காலத்திய மேதாவிகள் உலகத்தைச் சீர்திருத்துவதுபோல் நம்மதத்தையும்பல துறைகளில்சீர்குலைத்து சின்னபின்னப்படுத்த முயன்றாலும் அவரவர்கள் வீடுகளிற் புகுந்ததும் பிராசீன வழக்கங்களை ஒருபோதும்விடக்கூடாதென்று அனுஷ்டித்துவரும் நாரீமணிகளின் நிர்ப்பந்தத்தால் மடிவேஷ்டி கட்டிக்கொண்டு ஜாதிக்குறிய அடையாளங்களை நெற்றியில் அணிவதும் தேவனை வழிபடுவதும் நடந்து வருகிறது இனி அம்மணிகளும் நம்மைப்போல் படித்துவிட்டால் சொல்லவேண்டியகுறை ஒன்றுமிராது

கடைசியாகப் பத்திராதிபர் இத்தகைய மஹாநாடுகளின் பயனாக நமது ஸகோதரிகள் நேர்மையான வழியில் அபிவிருத்தியடைவதற்கு அவசியமான வசதிகள் ஏற்படுமென்றும் எதிர்பார்க்கிறோம் என்று முடித்துவிட்டார்

சகோதரிகள் நேர்மையான வழியில் அபிவிருத்தி அடைய இம்மஹா ஸபைகளா வேண்டும்? ஆகவே இம்மாதிரி மஹாஸபை இதுகாறும் ஏற்படாக்காரணத்தால் நம் ஸகோதரிகள் பலவிதத்திலும் கெட்டலைகிறதாயும் அவர்கள் அபிவிருத்தியடையாதவர்களாயும் அவர்கள் நம் புத்தியைச் சற்றும கேளாமற் கெட்டுவருவதாயும் ஏற்படுகிறது அவ்விதக் கெடுதல் யாதென ஆராய்ந்தால் பால்யவிவாகம் செய்யக்கூடாதென்பது அவசியம் பெண்கள் நம்மைப்போற் கற்கவேண்டும் ஸம அந்தஸ்தை அடையவேண்டும், விதவாவிவாஹம் செய்யவேண்டும்; இஷ்டப்படி கண்டகண்ட விடம் தீனியை உண்ணல் வேண்டும்; தீண்டாமையை அகற்ற வேண்டும் என்ற இவை முதலிய கன்மங்களே இனி நம் இந்தியா முன்னேற்றத்திற்கு இன்றியமையாக் காரணங்கள் என்பதை நம் மேதாவிகள் அனுஷ்டிக்கக் குட்டிக்காணம் போட்டும் ஸ்திரீகள்

வீட்டிற்குள்ளிருந்துகொண்டு தடங்கல் செய்கிறதால் இவர்களது ஆட்டம் பலிக்கவில்லை இதற்காக இவர்கள் என்னென்னவோ மந்திரம் போட்டார்கள் அதொன்றிற்கும் ஆடவில்லை பிறகு கடைசியாய் சிறுபெண்களைப் பள்ளியிலேற்றிப் படிப்பிப்பதுடன் மெள்ளமெள்ளப் பிரபுக்கள் தங்கள் ஸ்திரீகளுடன் உல்லாஸமாய் வண்டிகளில் வெளியுலாவச்சென்று அத்தகையோர்களைக் கூட்டம் கூடச்சொல்லி அவர்களுக்கு ஏதாவதொரு விஷயத்தையெழுதிக்கொடுத்துப் பலநாள் மனப்பாடம் செய்யச்சொல்லி பிறகு அதை அவர்கள் சபையில் திவ்யக்குரலுடன் வாசிக்கச் சொல்லி அதைப் பத்திராதிபர்கள் வாஸவதத்தை அம்மாள் அழகிய வியாஸம் படித்தார்கள் காதம்பரி அம்மாள் இவ்விதம் படித்தார்கள் சகோதரி திரிபுர சுந்தரம்மாள் அவ்விதம் படித்தார்கள் என்றும் பலவாறு புகழ்ந்து பத்திரிகையிற் பிரசுரம்செய்துவிடுகிறார்கள் இதைக்கண்டு பேதையான ஸ்திரீபுருஷர்கள் அவர்கள் எழுதியதாய் பூரணநம்பிக்கையுடன் மனதின் பலவிதத் திரிபுகளால் என்னென்னவோ எண்ணிவிடுகிறார்கள் ஆகவே இவ்வழியால் அவர்கள் நேர்வழியில் அபிவிருத்தியடைவார்களென்று பத்திராதிபர் கொம்புசீவிவிடுவது சரியே.

இனி இவர்கள் நினைக்கும் முன்னேற்றம் நிலைபெற்றோங்குமாவென்பதை கவனிப்பாம் இந்தியாவில் இப்போது எத்தனையோகோடிக்கணக்கான இந்துக்களிருக்கின்றனர்இதில்இக்காலத்தியநாகரீகத்தொழிற்படிப்பை அண்டாத கோடிகள்தான் அதிகம் நாகரீகம் படித்த சில லக்ஷங்களில் பிராசீன அனுஷ்டானமுறைகளையும் வேதசாஸ்திரங்களையும் உதறித்தள்ளி உலகத்தை முன்னேற்றவேண்டுமென்று துள்ளித்திரியும் மனிதர்கள் கணக்கிட்டால் ஒரு ஆயிரத்திற்கு எட்டுமோவென்பது சந்தேகம் இத்தகைய இவர்கள் ஏராளச்செலவு செய்து மற்றமனிதர்களைத் தன் நாகரீகத்திலிழுக்க முயல்கின்றனர்.

அதனால் சிலர் அவர் மதத்தைத்தழுவ ஆரம்பித்தபோதிலும் அவர்கள் கறைகடந்து பேசஆரம்பிக்கும்போது அவர்களைவிட்டு விலகிவிடுகிறார்கள். உதாரணமாய் காந்தி அவர்களிடம் மதிப்பு வைத்திருந்தவர்களுள் அநேகர் அவர் தென்னாடுகளில் வரம்பு கடந்து பேசிய விதவாவிவாஹம் முதலியவற்றால் வெறுப்படைந்துவிட்டார்கள். ஆகவே வரம்புகடந்து ஸ்திரீகளின் கூட்டத்தைக்

கிளப்பிப்பலவாறு பேசவிட்டபோதிலும் அதில் ஆஸ்திகர்களது பத்னிகள் ஒருபோதும் கலக்கவே மாட்டார்கள். தவிற இனி அகில இந்தியவர்ணாசிரம மகாநாட்டின் தீர்மானப்படியும் காஞ்சி காமகோடிபீடாதிபதிகளின் திவ்ய ஆக்ஞைப்படியும் வர்ணாசிரம தர்மிகள் மௌனத்தவத்தை விட்டு ஊர்ஊராய்ப்போய் பிரசாரம் செய்து ஸனாதனதர்மத்தின் மகிமையையும் லோகக்ஷேமாபி விருத்தியையும் எடுத்துரைப்பார்களாகையால் இவர்களது பிரசாரம் இனி அவகாசம் பெறுமோ வென்பது ஸந்தேகமாய் முடியுமானதாலும், இதைப்பற்றி கவலையடையாமல் ஜகத்குருவின் கருணையைத்தாங்கி தர்மப்பிரசாரத்திற்கு யாவரும் பாடுபட்டால் வந்திருக்கும் முன்னேற்றங்கள் குன்றி லோகக்ஷேமமுண்டாகும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

---

# சென்னை வைதிக ஹிந்துமஹாஸபை.

ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளநுக்ரஹப்படி சென்னையில் பல பேட்டைகளிலும் விவாஹவயதுமசோதாவைக் கண்டித்துக் கூட்டம் கூடி பல கையெழுத்துக்கள் வாங்கி வைசிராயிக்கும் கவர்னருக்கும் அனுப்பினோம். பற்பல மதாபிமான ஸபைத்தலைவர்கள் கையெழுத்து வாங்கி 11-3-28 மாலை 3 மணிக்கு தம்புச்செட்டி வீதி ஸ்ரீ சங்கர மஹாலயத்தில் ஓர் ப்ரும்மாண்டமான ஸபை கூட்டப்பட்டது. ஐநூறு ப்ரதிநிதிகள் வந்திருந்தினர், சித்தூரிலிருந்துவக்கீல்களும் வந்திருந்தார்கள். மஹாமஹோபாத்யாய சேட்லூர் நரஸிம்மாசார் ஸ்வாமிகள் மஹாமஹோபாத்யாய சுவாமிநாதய்யர் N. ஸ்ரீனிவாஸாசாரியார் பி. ஏ. பி. எல். விச்வநாதசாஸ்திரிகள் பி. ஏ. பி. எல். வி. ராமச்சந்திரய்யர் பி. ஏ. எல். டி. துபாஷ் டி. எஸ் ராமஸ்வாமி அய்யர் பெஸ்ட் அண்டு கோ (பிரதிநிதி என்ற முறைமையில் வந்துபார்த்து ஸபை தீர்மானத்தை சட்டஸபையில் நிறைவேற்றும்படி அழைக்கப்பட்ட 4 மெம்பர்களில்) சென்னை சட்டஸபை மெம்பர் கோவிந்தராஜமுதலியார் கே. ஜி. நடேசசாஸ்திரிகள் கடலங்குடி நடேசசாஸ்திரிகள் ராமசேஷய்யர் வைத்யபூஷண துரை

சாமி அய்யங்கார். முதலிய முக்ய சென்னைப் பெரிய மனிதர்கள் வந்திருந்தனர். ஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்களை வரவேற்றார். தலைவர் தாமதித்ததால் ஸ்ரீ உ-வே. சேட்லூர் ஸ்வாமிகள் தலைமை வஹித்து முன்னுரை கூறினார். அமரகலாவிலாஸினீஸபை மாண வர்களும் ஸ்ரீ வல்லபகணபதி அய்யர் பி. ஏ; (ஆர்யதர்மம் உபபத் திராதிபர் புத்திரர்) அவர்களும் ஸ்தோத்திரம் மனமுருகும்படி பாட ஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகள் முதல் தீர்மானத்தை ப்ரேரித் தார். திவான்பஹதூர் ஆஸ்திகசிரோமணி டி. ஆர் ராமச்சந்திர அய்யரவர்கள் 4 மணிக்கு வந்து தலைமை ஏற்றார், ஸ்ரீ துரைசாமி அய்யங்கார் ஸாமிநாதய்யர் (மயா) கர்ணம் முத்துசாமி சாஸ்திரி ப்ளீடர் ஜெயராமய்யர் ஸ்ரீ துபாஷ் ராமஸ்வாமி அய்யர் ஸ்ரீ மார்க் கண்டேயசர்மா ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமிகள் நாகை ஸ்ரீ அருணாசல சாஸ்திரிகள் முதலியவர்கள் ஆமோதித்து வெகு அழகாகப் பேசினர்; தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியபோது ஐந்தாறு மாணவர்கள் தாங்கள் எதிர்ஓட்டுக் கொடுப்பதாகக்கூற அவர்களை எவருமழைக்காததால் ஓட்டளிக்க அவர்களுக்கு உறிமையில்லை என அக்ராஸனர் கூற அவர் எழுந்து சென்றனர்.

மற்றத்தீர்மானங்கள் வாதத்திற்கிடமில்லாததால் தலைவரிட மிருந்தே தோன்றுவதாகக்கூறி ஸ்ரீ சர்மா படிக்க அவைகளும் நிறைவேறின. பலர் இத்தீர்மானங்களை ஆமோதிக்க ஆவல் கொண்டிருந்தும் அக்ராஸனர் நிறுத்திவிட்டார்; துபாஷ் ராம ஸ்வாமி அய்யர் தலைவருக்கு வந்தனங்கூற எல்லோருக்கும் ப்ரஸா தமளித்தபின் அழகாக ஸபை கலைந்தது.

## தீர்மானங்கள்.

(1) 11—3—28 திவான்பஹதூர் ஆஸ்திகசிரோமணி பிரம் மஸ்ரீ T. R. ராமச்சந்திரய்யரவர்கள் அக்ராஸனத்தின்கீழ் கூடிய சென்னை வைதிக ஹிந்துமஹாஸபையானது; சென்னை சட்ட ஸபையில் ஸ்ரீமதி டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளாலும், டில்லி சட்டசபையில் ராவ்ஸாகிப் ஹரவிலாஸ் சாரதாவாலும் கொண்டு வரப்படும். ஹிந்து பால்யவிவாஹவயதுமசோதாவை, சாஸ்திர ஸம்மதமான வைதிகஸம்ஸ்காரத்தையும், ஆசாரத்தையும் அது தடுப்பதாலும், மதாசார வழக்கத்தைத் தடுப்பதாலும் அநாவச்ய மாக மதாபிமானிகளின் ஸ்வாதந்திரியத்தைக் கெடுப்பதாலும் மாக்ஷிமை தங்கிய மஹாராணியார் அளித்த “ மதத்தில் தலையிடுவ

தில்லை" என்ற பிரதிக்ஞைக்கு விரோதமாயிருப்பதாலும் மிகப்பல மாகக் கண்டிக்கிறது.

(2) ஷை மசோதா சாஸ்திர விரோதமானதென்றும், மதத்தைப் பாதிக்கக்கூடியதென்றும், விளக்கிக்காட்ட ஸ்ரீ ஜகத் குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் ஆக்ஞைப்படி ஓர் பிரதிநிதியை (மகா-ா-ா-ஸ்ரீ என். ஸ்ரீநிவாஸா சாரி ஸ்வாமிகள் பி. ஏ. பி. எல். அகில இந்திய வர்ணாச்ரமஸபை தலைவரை) தேர்ந்தெடுத்து மாக்ஷிமை தங்கிய சென்னை கவர்னரிடமும் கனம் ராஜப்பிரதிநிதியிடமும் தூது அனுப்பத் தீர்மானிக்கிறது.

(3) எங்களது தூதை ஏற்று ஷை மசோதாவை ஸபையில் வாதத்திற்கே வாராதபடி நிராகரிக்கும்படியும் கனம ராஜப்பிரதிநிதியை வேண்டுகிறது.

(4) ஷை தீர்மானங்களை கனம் ராஜப்பிரதிநிதிக்கனுப்பவும் மெமோரியலில் கையெழுத்துகள் வாங்கியனுப்பவும் அக்ராஸனருக்கு அதிகாரமளிக்கிறது.

(5) இம்மஹாஸபை ஷை மசோதாக்கள் இந்துதர்மம் மதங்களுக்கு விரோதமாயிருப்பதால் இதை (சட்டஸபையில் வாதத்திற்கு வருமானால்) எதிர்க்கும்படி எங்கள் பிரதிநிதியான சென்னை சட்டஸபை 4-அங்கத்தவர்களையும் சென்னை பிரதிநிதியான அஸெம்ப்ளி மெம்பரையும் வேண்டுகிறது.

(6) லோகக்ஷேமத்திற்கு எல்லா வகையிலும் தர்மப்பிரசாரம் செய்து அனுக்ரஹம் புரியும் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளது பாதாரவிந்தங்களுக்கு இச்சபையின் பக்திச்ரத்தையுடன் கூடிய, ஸாஷ்டாங்க வந்தனத்தையும் ஸ்ரீ குருபாத பக்தியையும் விநயமாக விக்ஞாபனம் செய்துகொள்ளுகின்றது.

இக்கூட்டத்திற்கெனப் போடப்பட்ட பந்தலும் நாட்டியக் கொடிகளும், விவாஹம் போகத்திற்குமட்டுமல்ல, பிறப்புமிறப்பும் தைவச்செயல், என்பதுபோன்ற பல தர்மவாக்யங்களும் கண்ணைக் கவர்ந்தனும். அங்கே பல கையெழுத்துகள் வாங்கி மஹஜர் அனுப்பப்பட்டது, இச்சபையைக்கண்ணால் கண்டு மதாபிமானிகளின் தீர்மானப்படி நடக்கும்படி அழைக்கப்பட்ட டாக்டர் முத்துலக்ஷ்மி தானும் தன்னைச் சார்ந்தவர்களும் பேச இட

மளித்தால் வருவதாகக்கூற அது அநுமதிக்கப்படவில்லை பெண் மக்களும் லௌகிகர்களும் மாணவர்களும் குழுமி இதை உத்ஸா ஹத்துடன் கவனித்தது நமக்குள்ள பூர்ணபலத்தைக் காட்டு கிறது. உண்மைப் பிரதிநிதியான ஸ்ரீ கோவிந்தராஜமுதலியார் எம். எல். ஸி. அவர்கள் வந்து தன் கடமையைச் செய்ததைக் காண எல்லோரும் ஸந்தோஷித்தனர். இவ்வளவு வைபவத்திற் கும் ஸ்ரீமதாசாரியானுக்ரஹமே காரணம். ஸ்ரீமதாசாரியஸ்வாமி கள் ஆக்ஞையை சிரஸால் வஹித்து இதேபோல் செங்கல்பட்டு, நார்த் ஆற்காடு, சித்தூர் இம்மூன்று ஜில்லாக்களிலும் ஸ்ரீ ஸோம தேவசர்மா சீக்கிரம் மஹாநாட்டைக் கூட்டுவார். மதாபிமானிகள் ஸஹாயம் புரியவேண்டுகிறேன். கிருஷ்ணமூர்த்திசாஸ்திரி.

---

# ஸநாதநதர்ம்ம ஸம்வர்த்திநீ ஸபை

## பர்ளையப்பட்டி.

புதுக்கோட்டை ஸமஸ்தானம் திருமயம் தாலுக்கா பளையப் பட்டி கிராமத்தில் ஜகத்குரு பிர்ம்மஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் திருவருளை முன்னிட்டு பிரபவ வருஷ ஐப்பிசி மீ 27 வ. முதல் "ஸமீப க்கிராமங்களான 'நச்சாந்துப்பட்டி' குழிபிரை விராயாச்சிலை என்ற மூன்று கிராமங்களின் மஹாஜனங்களுடன் ஸநாதந தர்ம்ம ஸம் வர்த்தனீ என்ற ஸபை ஸ்தாபனஞ் செய்யப்பெற்று நடைபெறு கின்றது. இதில் மாதம் இருமுறை அதாவது பாக்ஷிகஸபை யாக பௌர்ணிமையிலும் அமாவாஸ்யையிலும் ஸபை நடந்து அரிய பெரிய அறிஞர்களைக்கொண்டு ஸநாதந தர்ம்ம ஸம்மந்த மான விஷயங்களைப்பற்றியும் விவாஹமசோதா மறுப்பினைப்பற்றி யும் தலைசிறந்த உபந்நியாஸங்கள் நிகழ்ந்து விவாஹமசோதா மறுப்பு மஹஸரும் மஹா-ா-ா-ஸ்ரீ மெட்ருஸ் கவர்னர் அவர்களுக் கும் மகா-ா-ஸ்ரீ வைஸ்ராய் அவர்களுக்கும் அனுப்பப் பெற்றி ருக்கின்றது. இம்முறையாகவே நிகழும் மாசி மீ 25 வ (8-3-28) குருவாரம் பிற்பகல் 3-மணிக்கு வழக்கம்போல் ஸபை கூடியது. அதில் திருகோகர்ணம் ஸம்ஸ்க்ருத வித்வான் பிரம்மஸ்ரீ T. N. இராமச்சந்திரசாஸ்திரிகளவர்கள் 'ஸநாதன தர்மம்' என்ற விஷயத் தைச்சிறந்த தர்ம சாஸ்திரங்களின் மேற்கோள்களாலும் ஸ்ரீசங் கரசரித்திர வாயிலாகவும் இனிய தமிழ் நடையால் உபன்னியா

ஸம் செய்தும் விவாஹமசோதாகண்டனத்தை சாஸ்திரீயமாகவும் ஸயுக்திகமாகவும் பேசியும் கேட்பவர் மனதை மகிழ்வித்தனர். அங்கு குழுமியிருந்த ஆண் பெண் பாலரனைவரும் மாலை 6-மணி வரை பொறுமையுடனிருந்து சிரவணம் செய்து ஸ்ரீமதாசாரிய பகவத்பாதாளின் தீபாராதனையைத் தெரிசனஞ் செய்து களித்த னர். ஸபையும் மங்களகரமாகவே இனிது நிறைவேறியது.

"ஸநாதந தர்ம்ம ஸபையும்—பார்மிசை
சங்கர னருளாற் பொங்கிடும் நிதமே சுபம்!

—— நாராயணஸாமி அய்யர்.

ஸ்ரீ ஸத்குரு பரப்ரம்மணே நம:

## ஸ்ரீ ராமநவமி மஹோத்ஸவப்பத்திரிகை.

கலௌயுகே கல்மஷமானஸானாம் நான் யத்திர தர்ம:கலுநிச்சயேன
ராமேதிவர்ண த்வயமாதரேண பும்ஸோஷ்ணவேத் தாபதவாக்ஜி தஸ்ய

இப்பாத கண்டத்துக்குத்திலகம்போல்விளங்கிவருகிற புந்நா கவனமென்னும் திவ்யக்ஷேத்திரமாகிய நாகூரில் பெருமாள்கோ வில் மேலவீதி மேல அக்கிரஹாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ பஜனை மண்டபத்தில் எழுந்தருளியிருக்கின்ற சாக்ஷாத் ஸ்ரீ வைகுண்ட நிலயவாசியாயும் இம்மையில் தர்மார்த்த காமியங் களையும் மறுமையில் மோக்ஷஸாம்ராஜ்யத்தையும் கொடுக்கப்பட் டவாராயுமான திருமூர்த்திகளும் ஓர் வடிவாகிய ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு நாளது பிரபவ-ஞு பங்குனி-மீ 16உக்கு (28-3-28) முதல் 20உக்கு(1-4-28)வரையில் ஸ்ரீ ராமச்சந்திரஸ்வாமி அவதார ஸ்ரீராமநவமி மகோத்ஸவத்தை பகவத்கிருபையை முன்னிட்டு நடத்துவதாய் நிச்சயித்திருப்பதால் ஷெ உத்ஸவத்திற்கும் இரா வில் மகான்களான அநேகம் ஸாதுக்களால் செய்யப்படும் பகவத் பஜனங்களுக்கும் கீர்த்தன குணானுபவங்களுக்கும் சங்கீத கதா காலக்ஷேபங்களுக்கும் பக்த கோடிகள் தங்களிஷ்டமித்திர பந்து ஜனங்களுடன் வந்திருந்து பரமாத்மாவை தரிசித்துப் பதிபுண்யத் தைக் கைக்கொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்கள் பிரீதிக்குரிய
பாகவத ஸமுதாய தாஸன்
ராம. து. வீராசாமி அய்யர்.

## விவாஹ வயது மசோதா கண்டனக் கூட்டம்.

### ஓமாம்புலியூர்.

இந்த பாடல் பெற்ற க்ஷேத்திரத்தில் 5-4-28 ல் மகோத்ஸவத்திற்காக சுற்றுப் புரங்களிலுள்ள 10-மயிலுக்குட்பட்ட ஸகல விஷ்ணு ஈசுவர மூர்த்திகளும் வடதிருக்காவேரியில் வந்து தீர்த்தவாரியும் உத்ஸவமும் கண்டருள்புரிந்தார்கள். அன்று மாலை 7 மணிமுதல் கூடியிருந்த பெருங்கூட்டத்தில் தென்னாற்காடு சேலம் ஜில்லாக்களுக்கு விவாக வயது மசோதா கண்டனப்ராசாரகரான ஸ்ரீமான் உமாமகேச்வர சாஸ்திரிகளால் தற்சமயம் சென்னையிலும்டில்லியிலும்கொண்டு வரப்பட்டிருக்கிற ஷை மசோதாக்களைக் கண்டித்தும் விவாகமென்பது ஹிந்துக்களுக்கு அஸ்திவாரமான தர்மத்துக்கு இன்றியமையாத ஆதாரமென்றும் அதைச்சட்டத்தினால் கட்டுப்படுத்தினால் தொண்டுதொட்டுக் கையாண்டுவருகிற நமது தர்மமும் மதமும் ஜாதியும் கெட்டுப்போய்விடுமென்றும் ஹிந்துக்களுக்கு ஊணிலும உடுப்பதிலும் பேசுவதிலும் பெயர் வைப்பதிலும் விருந்திலும் உத்ஸவத்திலும் தர்மமே ஊடுருவிச் சென்றிருக்கிறதென்றும் இவற்றுள் விவாகமே முக்கியமான தர்மஸாதனமென்றும் இதில்பிராமணேதரர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் உபந்யஸித்து இக்கண்டனத்தை ஷை ஸபைகளுக்கு அனுப்பும்படி தலைவருக்கு அதிகாரங்கொடுத்துச்சபை இனிது முடிந்தது.

வி உமாமகேசுவசாஸ்திரி

### திருநெல்வேலி ஜில்லா

1928ஞு மார்ச்சு-மீ 28உ திருநெல்வேலிஜில்லா நாரணம் பாள்புரம் கிராமத்தில் சாரதாவிலாஸினீ ஸம்ஸ்கிருத வித்யாசாலையில் மாலை 7-மணிக்கு விவாகவயது மசோதா கண்டன விஷயமாகக்கூடிய சபையில் சுமார் 200-ஜனங்கள் வந்திருந்தார்கள். ஷை ஸபைக்கு பிரஸிடெண்டாயிருந்த கோவாபிரேடிவ் பிரஸிடெண்டு மகா-ா-ஸ்ரீ மு. சங்கரய்யரவர்களிடம் ஷை ஸபா காரியதரிசியாயும் வித்யாசாலை பிரதம பண்டிதருமான கெ ஆர் குருஸ்வாமிசாஸ்திரியள் பின்ஷன் மாஜிஸ்டேட் ஸ்ரீநிவாசய்யங்கார் முதலான ஸகல ஜனங்களும ஏகாபிப்பிராயமாய் டாக்டர் முத்துலக்ஷ்மியின் விவாகவயதுமசோதாவை அழுத்தமாகக்கண்டித்து அதை ரத்து செய்யும்படி ஏற்பட்ட தீர்மானத்தை கனம் கவனர் ஜனராலுக்கும் சென்னைகவர்னருக்கும் அனுப்பும்படி பிரஸிடெண்டினிடம் அறிவிக்கப்பட்டு ஸபையும் முடிவுபெற்றது.

K. R குருஸ்வாமிசாஸ்திரியள்